சிலம்பும் சலங்கை ஒலியும்

Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

8.6-2024

சிலம்பும், சலங்கை ஒலியும்

கண்ணகி

நிலா மாடத்தில் நின்றிருந்த கோதையோ தேய்பிறை-
வானில் உலா வந்த வான் மதியோ வளர் பிறை
சீதள நிலவோளியும், தென்றலும் அனலாய்த் தகிக்க-
ஈர விழிக்காவியமாய் ஏங்கி நின்ற பெண்மை

கற்புடை மகளீர் கதை கேட்டு-மண வாழ்வில்
நற்துணைவியாய் வாழ ஆசைப்பட்ட மங்கை,
ஆடவர் மனம் அறியாப் பேதை, மலர் தாவும்
வண்டாய் , மணளாளைக் கண்டு பேதலித்த நங்கை

முதலிரவன்று வந்த நிலவோ முத்தம் தந்து அணைக்க,
தழுவிய சீதளத் தென்றலும் காதற் காமத்திற்கு
கட்டியம் சொல்ல, இனித்த இரவு-இன்று
எல்லாம் கலைந்த கனவு, மனதை வாட்டும் இரவு

கரும்பும், வல்லியும் செம்பஞ்சுக் குழம்பால்
தோளிலும், மார்பிலும் தீட்டிய ஓவியன், மாசறு பொன்னோ,
வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே
காதலைக் கவிதையாய் வடித்து மயக்கிய கவிஞன்

இன்று தனிமையில் காயும் நிலவாகி,
காதற் காமம் நெஞ்சைத் தீய்க்க, காதலன் எழுதிய
ஓவியமும், பாடிய கவிதைகளும் பாழ்பட, மைவிழிகளில்
நீர்க்கோலம், நெஞ்சில் கலைந்த மணக்கோலம்

அருந்திறல் பாவாய், அலையிடைப் பிறவா அமுது,
மலையிடைப் பிறவா மணி, பெருங்குடி வணிகன்
பெருமட மகளே! என மயங்கிய காதற் கணவன்
ஆடலரசி மாதவியிடம் மயங்கியதென்ன?

அஞ்சனம் கரைய அழுதும்-வஞ்சியின் நெஞ்சத் தாபம்
தணியவில்லை-கலிங்கம் இருக்க, காஞ்சி நழுவிட
பூவுடல் மெலிந்தும், கண்ணகியின் சோகம்
குறையவில்லை, சிலம்பின் சினுங்கல் மாறவில்லை

பஞ்சைப் பற்றிய நெருப்பாய்க் காதல் தீ வளர-
அஞ்சுகத்தை அனலாய் வாட்டும் பிரிவின் சோகம்,
வான் நிலா தழுவிட, கோவலன் தழுவிய பாவம்,
கொதிக்கும் நெஞ்சில் மாறாத விரக தாபம்

தென்றலும் தீயத்தது, தேன் நிலவும் சுட்டது,
ஒற்றைக் குயிலாய்க் கரையும் மனம்
ஓயாத அலைகளாய் நெஞ்சில் சோகம்-வண்ண
முகம் கறுக்க, வாடி மெலியும் கோதை

மலர் முகம் வாடிச் சோர, எண்ணமெல்லாம்
கோவலனை எண்ணித் துடிக்க, தந்தி
அறுந்த வீணை இசை மீட்கத் துடித்தது
முடமான தோகை நடனம் ஆடத் தவித்தது

அன்று கண் நகையில் புன்னகை-செங்கனி
வாய் மொழிகளில் தேன் சுவை, சந்தனம்
எழுதிய பொன் கொங்கைகளில் குளிர்மை
அஞ்சுகத்தின் நெஞ்சிலே காதலின் இனிமை

பொட்டிளந்தவள் போலும், பூவிழந்தவள்
போலும், நெஞ்சில் ஓயாத சோகம், பட்டும்,
பரிமளமும், பொன்னணியும் துறந்த மனம்
காதல், காதல் என்று புலம்பும் தினம்

என் பொன் வண்ணம் குலைந்ததடா,
மேனியின் பூ வாசம் மறைந்ததடா-கண்ணாளா
உன்னைப் பிரிந்து மனம் புண்ணானதடா,
பொன்னும், பொருளும் எனக்கு மண்ணானதடா

மலரலளந்த கார்குழல் மலர் மறக்க, மையல் சொல்லும்
தையல் பூவிழிகள் மையிழக்க, அணியிழந்த பொன்மேனி,
திலகம் துறந்த பிறை நுதல், ஒளியிழந்த மதிமுகம், எண்ணி
விம்மிட குங்குமம் குலைந்த பொன் கொங்கைகள்

புன்னகை சிந்தும் பவள வாய் வெளுப்ப, குங்குமச் சாந்து
மறந்த பொன் கொங்கைகள் வாடிச் சோர, குண்டலம்,
கைவளை துறந்த நங்கை, சூடிக்கொண்டவன் நெஞ்சில்
நானில்லை என்ற சோகம் மனதை கொல்ல வாடிய பேதை

இதுதான் காதலா? இதுதான் வாழ்க்கையா?
மலர்தாவும் வண்டுதான் ஆண்மையா? விம்மிய மனம்

பொன் கொடுத்தாள், பொருள் கொடுத்தாள்,
கண்ணாளன் மகிழ்வோடு மாதவியோடு கூடி வாழ,
உள்ளதெல்லாம் கொடுத்த உத்தமி-வற்றாத
காதல் உள்ளத்தை மட்டும் கொடுக்க மறுத்தாள்

என்னை மறந்த நெஞ்சில் ஏழ் கடலாய்ச் சோகம்
அஞ்சனம் இழந்த விழிகளில் இருள் படர்ந்த பாவம்
இதயமெங்கும் சூனியத்தின் நர்த்தனம்,
காதலனைப் பிரிந்த நெஞ்சில் முகாரியின் ஆலாபனம்

எண்ணமெல்லாம் நீயாகி, என்
இதயமும் உனதாகி-எனக்குள்ளதெல்லாம்
உனதாகி, என்னையளித்தேன்-கண்ணாளா
ஏன் மறந்தாய் என்னை, ஏன் துறந்தாய் என்னை?

ஆடல் தெரியாத மங்கை, கோவலன் உன்னோடு
கூடிப் பாடிய கோகில நங்கை, இன்றோ
ஒற்றைக் குயிலாய் கரையும் விழிகளில் கங்கை
உன் பிரிவால் வாடும் இதயத்தில் காங்கை

மணமிழந்ததோ நம் திருமணம்-ஆடல்
மங்கையிடம் மையல் கொண்டதோ உன் மனம்
நீ வருவாய் எனத் தவமிருக்கும் மனம்
இலவு காத்த கிளியாய் கழியும் தினம்

மாதவிப் பெண் மயிலாள்

பரதக் கலையறிந்த கணிகை மகள், முறையாய் கதைகளுக்கு
நர்த்தனம் ஆடி இரசிகர் மனதைக் கொள்ளை கொண்ட ஆடல் மகள்
ஊர்வசியின் வாரிசு, ஒருவனுக்கு ஒருத்தி என்று -குலமகளாய்
வாழத் தவமிருந்தும், வரமில்லாத பூவை, அழகு வற்றாத பொய்கை

சலங்கை ஒலிக்க, மாதவிப் பெண் மயலாள்
தோகை விரித்தாட, கலைமகளும், திருமகளும் ஒன்றான
தேவதை, ஆடற் கலையால் கோவலன் மனதை கொள்ளை
கொண்ட அபிநய சுந்தரி, காதற் சுவை குன்றாத முந்திரி

கலவியும், புலவியும் ஈந்து, காதற் கள்வனுக்கு
ஊடலாகி இன்பமளித்த மாங்கல்யம் கடந்த உறவு,
ஊர்வசி வழி வந்த ஆடலரசி, குலமகளாக
கண்ட கனவோ கானல் நீரான நிகழ்வு

இன்பமே வாழ்வு என காம சுக்த்தில் இன்புற்ற வணிகன்,
கூடி வாழும் உறவு காலமெல்லாம் நிலைக்குமோ ?
அச்சத்தில், கானல் வரிப் பாடல் பாடிய நங்கை, அவமானம்
என்றே மாதவியைத் துறந்திட கானல் நீரான வாழ்க்கை

நான் உமக்குத் தேவையில்லை-ஆனால்
நீ எனக்குத் தேவை, என்னால் கண்ணகி பட்ட
துன்பம் கொடிது, பிழை பொறுத்து, கண்ணாளா
பேதை என்னை ஏற்க வேண்டும்

மஞ்சத்தில் மாதவி உடற் சுகம் கண்டவன், மடலில்
நெஞ்சத்துப் பேரழகைக் கண்டான், மஞ்சத்திலிருந்து,
நெஞ்சத்திற்கு வந்த மாதைப் போற்றிய மனம்-மங்கை
வாட, தீயவன் நான் என்றே மாதவியைப் பிரிந்தான்

ஆடல் நெஞ்சிலோ வாடாத காதல், வணிகன்
கோவலன் நெஞ்சிலே மாறாத சோகம்
ஒருவனுக்கு ஒருத்தி என வாழ நினைத்து
ஏமாந்த மங்கை, இன்றோ சோக கங்கை

கானல் வரிப் பாடலால் ஊடலாகிப் பிரிந்த உறவு,
இனி உன்னை நினையேன் என கோவலன் பூண்ட
காதல் துறவு, மாதவியை பிரிந்த நிகழ்வு
கண்ணகிக்கோ இரண்டாம் தேன் நிலவு

காமத்தில் களித்து, மோகத்தில் திளைத்து
மாதவியோடு மணாளன் கூடி வாழ,
இருந்த பொன்னணிகள் எல்லாம் ஈந்து,
தன்னலம் துறந்த குலமகளாய்க் கண்ணகி

விலைமகள் நெஞ்சிலும் காதல், குலமகள் நெஞ்சத்திலும்
மாறாத காதல், பொன் கொடுத்தாள் பரதம்,
பொருள் கொடுத்தாள் மஞ்சம், ஆடல் மங்கையருக்கு
ஏது பஞ்சம்? வணிகன் மனதிலே மாறாத கோபம்

வான் மதி கண்டு மாதவி சோர-தேன் நிலாக்
கண்டு கண்ணகி மகிழ, கண் நகையால் புன்னகை
சொன்ன தேவி, கால் நகையை களிப்போடு
கொடுத்தாள், புது வாழ்வு வாழ்வோம் நாம் என்று

நடந்தாள் வாழி காவிரி மறந்து, வைகை ஆடும்
புகார் நோக்கிய காதலராய்ப் புதுப் பயணம்

கைத்தலம் தந்தவன் கள்வனாய்க் கொலையுண்டான்
கோபத்தில் கொதித்த மனம் நீதி கேட்டு குமுறியது,
மன்னனும், மகாராணியும் ஒன்றாய் மடிய, அநீதிக்காய்
மதுரையை எரித்து மங்கை மனம் ஆறியது?

சிலம்புடைத்து நீதியைக் கோரிய நங்கை, இடம்
வலம், கடந்து நீதியை நிலை நாட்டிய மங்கை
ஆடலரசி மாதவி ஆடாத அதிசய நர்த்தனம்
கற்புக்கரசி ஆடிய ருத்திர தாண்டவம்

சிலம்பு நொருங்க, மாணிக்கப் பரல்கள் பல திசையும்
தெறிக்க, கனிவாய் மொழிகள் கனலாய்க் கொதிக்க
மன்னனும், தேவியும் மடிய, மதுரை எரிய ஆடிய
தாண்டவம், கற்பிற்கு இலக்கணமோ? தர்மமோ? நீதியோ?

பரத்தை மாதவியைப் பொறுத்த மங்கை, கோவலன் காதலை
மறவாத நங்கை, என் கணவன் கள்வனோ?, சீறிச் சினந்த
மங்கையின் விழிகளில் காளியின் கோலம், பாராண்ட
மன்னனைப் பழித்த மொழிகளில் ஊழித் தாண்டவம்

மாண்டவனை மீண்டும் எழுப்பிட மங்கை
மாங்கல்யத்திற்கு பலமில்லை, கண்ணகி
கற்பிற்கும் வரமில்லை, எரியும் தீயில் மதுரை
எரிந்தும் கருகாத சோகத்தில் மங்கை

மாண்டவன் மீண்டால் மகவையும், மாதவியையும்
மறுபடியும் பார்க்கப் போவானோ? இல்லை
மதுரை நகரத்து ஆடலரசிகளிடம் மயங்கிக் கிடப்பானோ?
என்னை மறப்பானோ தயங்கியதோ நெஞ்சம்?

ஆடவர் உள்ளம் மலருக்கு மலர் தாவும் வண்டானது,
மாதரசி மனமோ கணவனோ கண்கண்ட தெய்வம்
கூற்றுக்குச் சான்றானது, கண்ணகி உள்ளத்தில் ஓயாத
போராட்டம், கண்களில் காவிரியின் நீரோட்டம்

கண்பார்த்து நெஞ்செழுதும் காதற் காமத்திற்கு
கன்னியும், கணிகையும் விலக்கல்ல
குலமகள், விலமகள் பேதமில்லை-கோவலனுக்கு
காதல் அறிவு கடந்த இதயத்தின் மொழியானதோ?

என் ஆடல் கலையின் இரசிகனாய்,
என் காதற் கலையின் மதனாய்,-கூடி வாழும்
கலைக்கு தலைவனாய் என் வாழ்வில் கலந்தவன்
மாண்டான் எனக் கேட்டு மனங்குமுறிய மாதவி

அழகின் அதிசயம், ஆடற்கலையின்
திகட்டாத மதுரசம், காமன் கலைக்கு கவி நயம்,
கோவலனைத் தந்தையாக்கிய காதல் நயம்
துறவியான மாதவியோ பெண்மையின் அதிசயம்

முறையாய் கொண்டவனுக்குப் பிரமாணிக்கமாயிருந்த
குலமகளும் கற்புக்கரசி, கூடி வாழ்ந்தவனுக்கும்
விசுவாசமாயிருந்த ஆடலரசியும் கற்புக்கரசி,
மாதவி, மணிமேகலை வாழ்வும் புதுப் புரட்சி

சலங்கை மௌனிக்க, நொருங்கிய சிலம்பும்
அழகிழக்க, எங்கும் ஒற்றைக் குயிலின் கானம்
மாநகர் எரிய மதுரை மக்களின் ஓலம்

மன்னர் அவையிலும், மக்கள் சபையிலும்-ஆடியபோது
அணங்கிற்கு பொன்னும், மங்காப் புகழும் சொந்தமானது
காதலாகி கோவலன் நெஞ்சில் ஆடிய மங்கையை-இன்று
கண்ணீரும், தாய்மையும் சொந்தம் கொண்டாடியது

அழுபவள் கண்ணீர் துடைத்து ஆறுதல் மொழிய
அன்புத் துணையில்லை, காதற் கள்வன்
கோவலனோ அணங்கை விட்டகன்ற நிலை-
பொன்னும், புகழும் புழுதியான அவல நிலை



இறகொடிந்த வானம்பாடி வான் பார்தழுதது-
முடமான தோகை கார் முகில் பார்த்து ஆடிட ஏங்கியது
ஒற்றைக் குயில் துணையைத் தேடிக் கேவிக் கரைந்தது

ஆடலரசி அரங்கில் ஆடிக் காட்டாத அபிநயங்களை
சலங்கையின்றி வாழ்வில் ஆடாமல் காட்டினாள், பூவிழிகள்
காதல் கொண்டு பூத்தாடியது கனவானது, காட்டாறாய்
கண்ணீர் பெருக்கெடுக்க வாழ்வு ஈரவிழிக் காவியமானது

ஒரு விழியில் புன்னகையும், மறு விழியில்
கண்ணீரும் சிந்தி ஆடலரசி அழுதாள்
ஒரு புறத்தில் சோகம் காட்டி, மறுபுறத்தில்
காதலைக் காட்டி அபலை அபிநயித்தாள்

பூத்தாடும் வண்ண மலர்களின் அபிநயங்கள் அரங்கில்
நூலறுந்த காற்றாடியின் அபிநயங்கள் வாழ்வில்
மாரி மழையோ சேல் விழிகளில் -நெஞ்சை
நொருக்கும் சோகப் பூகம்பமோ பூ இதயத்தில்



செவ்வாயில் அமுதச் சுவை , அழகு பூத்தாடும் பொன்மேனியோ
அழகின் அவை என்று, அன்று கவிபாடிய காதலன் விட்டுப் பிரிய
அணங்கின் பவளச் செவ்வாய் மொழிகளில் அவலச் சுவை
ஆடலரசியின் அழகுப் பொன்மேனியிலோ புழுதியின் அவை

ஆனந்தக் கண்ணீர் கோடை மழையாக
அழுகையும், புலம்பலும் மாரி மழையாக
காதல் வாழ்வு- காரிருளில் மூழ்கிப் போயிட
உனக்கு நீயே ஒளியாகிப் போ
புத்த பெருமானின் வாக்கு புது உதயமானது

ஆடிய பாதங்கள் ஆறுதல் தேடிட
போதி மாதவனின் கருணை அமைதி ஈந்தது.
ஒலித்த சலங்கை அமையில் நிலைத்தது

கோவலன்

பொன், பொருளோடு வந்த திருமகளை
மணமகளாய்க் கொண்ட வணிகப் பெருமகன்
பொன் கொடுத்துப் பெற்ற கலைமகளை
காமப் பொருளாய்ச் சுவைத்த காமுகன்



வணிகனுக்கு பெண்மை உடைமைப் பொருளாகிட
மாலையிட்ட மங்கையின் சுகமும் சில காலம் என்றானது
ஆண்மையை மயக்கிய ஆடலரசியின் கலையும்,
புலமையும் வணிகனுக்குச் சிறு பொழுதாய் கழிந்தது

கல்லானாலும் கணவன், புல்லானாலும்
புருஷன் என்ற குலமகள் வேதம்,
கணிகை மகள் என்றாலும், மண உரிமை
வேண்டும் என்ற ஆடல் மகள் கோஷம்

மாலையிட்டு மணாளனைத் தெரியும் சுயம் வரம்,
குலமகளுக்கும், ஆடல் மகளுக்கும் எட்டாத நிலவானது,
பெற்றோர் பேசி முடித்த பந்தமும், பொன்னால்
விலைபோன பெண்மையும் வணிகனுக்குப் பண்டமானது?

முத்து, பொன், நவரத்தினங்களை சோதித்தறியும்
வணிகனுக்கு, பெண்மையின் பெருமை தெரியவில்லை
குலமகளையும் அழவைத்த கணவன்,
கொண்ட கலைமகளையும் கைவிட்ட கலைஞன்

காமபோகமாய் கண்ட பெண்மை ஆண்மைக்கே சிறுமை
யானே அரசன், யானே கள்வன், பாண்டியனுக்கே
உரித்தான பெருமையானது, மன்னனோடு
மகாராணி மடிந்த நிலை பெண்மைகே மேன்மையானது

சலங்கை சிலிர்க்க, சப்த ஸ்வரங்கள் ஒலிக்க
அபிநய சுந்தரி ஆடிய நர்த்தனம் தென்றலானது
சிலம்பு நொருங்க, சிந்தை எரிய, மாணிக்கப் பரல்கள்
நாற்புறமும் தெறிக்க குலமகளின் கோபம் புயலானது

சலங்கையின் நாதத்தில் பிறந்த நர்த்தனம் கலையானது,
சிலம்பின் சீற்றத்தில் பிறந்த ரௌத்திரம் தீயானது,
குலமகளும், கலைமகளும் கொண்ட காதல்
வரமா? சாபமா? கேள்வியானது

குங்குமம் கலைய. கோதை மலர் உதிர,
மங்கல நாண் அறுந்திட, சலங்கை ஒலி
சுரமிழக்க, மாண்ட கோவலனால்
மங்கையர் விழிகளில் மழைக்காலம்

சிலம்பொலிக்க, சிந்தை மகிழ குங்குமம் தந்தவனோடு
தொடங்கிய மங்கலப் பயணம்-முடிவில் குங்குமம்
கலைந்து. மாங்கல்யம் அறுந்து அமங்கலமாய் முடிய-
குலமகள் ஆடிய ருத்திர தாண்டவம்

சிலம்பும், சலங்கையும் ஓய்ந்து போனது
சிங்கார நடையும், அலங்கார உடையும்
சீவர ஆடையில் மறைந்து போனது-மாதவியின்
சிந்தை தெளிய வாழ்வு அருளறமானது

மங்கலம் முழங்க, சலங்கை ஒலிக்க, சபையோர் வியக்க,
ஆடலரசியின் நடன அரங்கேற்றம் அன்று, காதல் கானல் நீராகி,
தேடிய அமைதி மறைந்திட சீவர ஆடையில் அன்னையின்
ஆனந்தத் தாண்டவ அரங்கேற்றம் இன்று

குலமகளும் வாடினாள், ஆடல் மகள் மாதவியும்
வாடினாள், அருளறமே உயர்ந்த அறம்,
மனம் தெளிந்த மங்கை போதிமாதவனிடம்
சரணடைய, வாழ்வில் தொடங்கிய புதுப் பயணம்

மலர்க் கூந்தல் கழித்து, மங்கலவணி களைந்து, பட்டும்,
பஞ்சணையும் பரதமும், துறந்து, சீவர ஆடை தரித்து,
மனம் கழிய, மாதவி தொடங்கிய துறவறம்,
மகள் மணிமேகலைக்கோ நல்லறம்

தம்மமும், பஞ்ச சீலமும், அட்டாங்க மார்க்கமும்
அறவழி காட்ட, ஆடிய பாதங்கள் ஓய்ந்திட,
சலங்கை மௌனிக்க, உள்ளொளியோடு நடந்ததை
நலமென ஏற்று, உறுதியோடு புது வழி நடந்த பூவை

தம்மத்தில் நீராடி, சீவர ஆடை நெருப்பாய் ஒளிர
புதுபபொன்னாய் ஒளிர்ந்த ஆடல் மகளின் மேன்மை
மன்னனும், மகாராணியும் மடிய, மதுரையை தீயால்
நீராட்டி, வெஞ்சினத்தில் வெந்த பெண்மையோ சிறுமை?

புத்தம் சரணம் கச்சாமி,
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-06-2024